Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.162/2021

Deposition of witness for: DW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : சாந்தி | Father/Husband Name | : குமரன் |
| Age | : | Calling | : |
| Date | : 02.04.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02 day of 04.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

எதிரிதரப்பில் முதல்விசாரணை

நான் தற்போது சென்னையில் எனது மகன் வீட்டில் இருந்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். நான் 07.08.2001ம் தேதி எனது மகளான நாகேஷ்வரி என்ற யசோதா வீட்டில் இருந்து வந்தேன். அப்போது குமரகுரு, பாலசுப்பிரமணியன், டார்வின், பிரகாஷ் ஆகிய போலீசார் காவலர் சீருடை இல்லாமல் எனது வீட்டிற்கு வந்தார்கள். அவர்கள் என்னையும், எனது மகளையும், பேரனையும் வேன் மூலம் ஒத்தக்கடை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். சென்னையிலிருந்து வந்த எனது மகன் ராஜா என்ற நாகராஜ் நான் வீட்டில் இல்லாததை பார்த்து அக்கம்பக்கத்தினரிடம் விசாரித்து ஒத்தக்கடை காவல் நிலையத்திற்கு வந்தார். அவரையும் போலீசார் பிடித்து வைத்துக்கொண்டார்கள். எனது கைப்பேசியையும் போலீசார் பெற்றுக்கொண்டார்கள். அந்த போனில் கோபிகண்ணன் என்னிடம் அவரது கடை திறப்புவிழாவிற்கு இருந்ததை பார்த்து, அவர் யார் என்று கேட்டார்கள். நான் அவர்களிடம் எனது 2வது மகள் ஜெய்ஹிந்த்புரத்தில் இருந்தபோது கோபிகண்ணனிடம் நகை வாங்கிய விவரத்தை சொன்னேன். மேலும் அவர்களிடம் எனது மகள் கோபிகண்ணனிடம் 3/4 பவுன் நகை வாங்கியிருப்பதனால் நானும், அவரது கடையில் எனது 2,1/2 பவுன் செயினை கொடுத்துவிட்டு 3 பவுன் செயின் அவரது கடையில் விலைக்கு எடுத்தேன்

என்ற விவரத்தை அவர்களிடம் சொன்னேன்.

போலீசார் எனது மகன் நாகராஜ்யை அடித்து கோபிகண்ணன் கடையிலிருந்து நகைகளை பெற்றுதர சொன்னார்கள். என்னிடம் எனது மகனை ஒப்புக்கொள்ள சொல்லி மிரட்டினார்கள், இல்லையெனில் எனது மகள் யசோதா வாழ்க்கையை அழித்துவிடுவதாக சொன்னார்கள். என்னிடம் குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை என்றால் பல பொய் வழக்குகளை என்மீதும் எனது மகள் மீதும் போடுவதாக சொன்னார்கள். அன்றையதினம் இரவு 08.00 மணிக்கு காவலர் ஜெயலெட்சுமி, ஆனந்ததாண்டவம், பாஸ்கர், சிவபாலா ஆகியோர்கள் என்னை மீனாட்சி காலனியில் உள்ள எனது வீட்டிற்கு என்னை அழைத்து வந்தார்கள். அவர்கள் எனது வீட்டிலிருந்த எனது பீரோவை திறந்து எனது பீரோவில் இருந்த எனது மகள் திருமணத்திற்கு சேர்த்து வைத்திருந்த 18 பவுனை எடுத்துக்கொண்டார்கள். நான் நகைகளை வாங்கியதற்கான ரசீதுகளை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன் (**அந்த நகை ரசீதுகள் அசல் 3 எண்ணிக்கை எமசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அதன்பின்னர் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். என்னையும், எனது மகன், மகளையும் தனி தனியாக வைத்து என்னிடம் எனது மகனை குற்றத்தை ஒப்புக்கொள்ள சொல்லி என்னை அடித்து துண்புறுத்தினார்கள். நான் போலீசாரிடம் எனது நகைகளான ரசீது உள்ளதாக சொன்னேன். அவர்கள் ரசீதுகளை கேட்டார்கள் நான் கொடுக்க மறுத்துவிட்டேன். அதன்பின்னர் என்னை சத்திரப்பட்டி காவல் நிலையத்தில் அடைத்து வைத்திருந்தார்கள். என்னிடம் குற்றத்தை ஒப்புக்கொண்டால் நகைகளை திருப்பிதருவதாக சொன்னார்கள், நான் குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. அவர்கள் என்னிடம் எனது நகைகளை அனைத்தையும் உருக்கி, கட்டியாக்கி எடுத்துக்கொள்வதாக சொன்னார்கள். 08.10.2021ம் தேதி இந்நீதிமன்றத்தின் நீதித்துறை நடுவர் முன்னிலையில் ஆஜர் செய்தார்கள். அவர்களிடம் என்னையும், என மகனையும் அடித்து துண்புறுத்திய விவரத்தை சொன்னேன். அவர்களிடம் என்னிடம் எனது நகைக்கான ரசீது இருப்பதை சொன்னேன், நீதித்துறை நடுவர் அவர்கள்

மனுதாக்கல் செய்து ரசீது மூலம் நகைகளை பெற்றுக்கொள்ள சொன்னார்கள்.

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**